அ.வ.எண். **54/2021** வா.சா.**1 -** சுகந்தா **20.09.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, **3**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பி.காம்., பட்டம் படித்துள்ளேன். 2ம் வாதி B.E., பட்டம் படித்துள்ளார். 2018ம் வருடத்தில் அவர் படித்து முடித்தார். அவர் தற்போது ICICI வங்கி, சென்னையில் வேலை பார்த்து வருகிறார். அவருக்கு தற்போது திருமணமாகிவிட்டது. 3ம் வாதி இவ்வழக்கு தாக்கல் செய்தபோது 12ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். 3ம் பிரதிவாதியின் வயது 84 என்றும், நான் வழக்கிற்காக தவறாக 3ம் பிரதிவாதியின் வயது 50 என குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் அவரது வயது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி என் மாமியார். 2ம் பிரதிவாதி என் கணவர். எனக்கும், என் கணவருக்கும் எந்தவித பிரச்சினையும் கிடையாது. இவ்வழக்கை தவிர, என் கணவருக்கு எதிராக நான் வேறு எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் மற்றும் என் மாமியாருக்கு எதிராக நான் எந்த காவல்நிலையத்திலும் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நானும், 1, 2 பிரதிவாதிகளும் வழக்குச்சொத்தில் வசித்து வருகிறோம். 1, 2 பிரதிவாதிகள் இவ்வழக்கில் வருகையில்லாதவர்களாகிவிட்டனர். அவர்கள் என்னுடன் கள்ளக்கூட்டு சேர்ந்து வருகையில்லாதவர்களாகிவிட்டனர் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தான வீடும் மற்றும் திருமாநிலையூர் கிராமத்தில் உள்ள விவசாய நிலங்களும் என் மாமனாருக்கு சொந்தமான சொத்துக்கள் ஆகும். வழக்குச்சொத்துக்களை பொறுத்து, 1, 2 பிரதிவாதிகளுக்கு என் மாமனார் உயில் எழுதி வைத்துள்ளார். 1ம் பிரதிவாதி ஆயுள்வரை அனுபவம் செய்துக்கொண்டு, அவருக்கு பிறகு 2ம் பிரதிவாதி அந்த சொத்தை அடைய வேண்டும் என உயில் எழுதப்பட்டுள்ளது. என் மாமனார் 12.03.2012 அன்று இறந்துபோனார். என் மாமனார் இறந்தபிறகு, அவர்

எழுதி வைத்த உயில் அமுலுக்கு வந்துவிட்டது. அந்த உயில் பதிவு செய்யப்பட்ட உயில். எனக்கும், 2, 3 வாதிகளுக்கும் உயிலில் எந்த உரிமையும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்து வாதிகளுக்கு பூர்வீகமானது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து என் மாமனாரின் அப்பா மாரியப்பனுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என் மாமனார் கண்ணனுக்கு செம்பாயி அம்மாள், செல்லம்மாள் ஆகிய இரண்டு சகோதரிகள். மேற்படி செல்லம்மாள் அவருக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகத்தை என் மாமனார் பெயருக்கு விடுதலை எழுதி கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி நேரடியாக தெரியாது. செம்பாயி அம்மாள் என்பவர் கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 54/1969 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவ்வழக்கில், வழக்குச்சொத்துக்கள் மாரியப்பன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அதில் செம்பாயிக்கு 1/3 பாகம் உள்ளது என தீர்ப்பாகியுள்ளது என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்போது எனக்கு திருமணமாகவில்லை. மேற்சொன்ன வழக்கின் இறுதிநிலைத்தீர்ப்பாணையில், என் மாமனார் கண்ணன் பாகத்திற்கு வழக்குச்சொத்து முழுவதும் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வழக்குச்சொத்து என் மாமனார் கண்ணனின் பூர்வீகச்சொத்து இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் இறுதிநிலைத்தீர்ப்பாணை பற்றிய விவரத்தை நான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் என் மாமனார் கண்ணனுக்கு தனிப்பட்ட சொத்து என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் நான் மேற்சொன்ன ஆவணங்களை

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் கண்ணன் இறப்பதற்கு முன்பு சென்னையில் வைத்து சிகிச்சையளித்தோம் என்றால் இல்லை. என் மாமனார் இறக்கும்வரை என் கணவர் அவரை பார்த்து வந்தார். 2012 அக்டோபர் மாதம் முதல் 2017 மார்ச் மாதம் வரை, சுக்காலியூரில் உள்ள கரூர் - திண்டுக்கல் பைபாஸ் ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்க்கில் வேலை பார்த்து வந்தார். அந்த பெட்ரோல் பங்கில் எத்தனை பேர் வேலை பார்த்தனர் என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கு மூன்று மகள்கள் மட்டும் உள்ளனர் என்றும், மகன் கிடையாது என்றும் சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. 3ம் பிரதிவாதி சூர்யா டிரேடர்ஸ் பெட்ரோல் பங்கின் உரிமையாளர் கிடையாது என்றும், அந்த பெட்ரோல் பங்க் 3ம் பிரதிவாதியின் 2வது மகளின் கணவர் ரெத்தினராஜன் என்பவருக்கு சொந்தமானது என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி, அவருடைய 70 வது வயதில், அவரது 2வது மகளின் கணவர் ரெத்தினராஜன் என்பவர் இறந்தபிறகு, கரூருக்கு மேற்படி பெட்ரோல் பங்க்கை பார்த்து கொள்வதற்காக வந்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் கணவர் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தபோது, அவருக்கு மாதம் ரூ.6000/- மட்டும் சம்பளம் கொடுத்தனர் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்க் நஷ்டத்தில் இயங்கியது என்றும், அதனால் 3ம் பிரதிவாதி என் கணவரிடம் வெற்றுத்தாள்களில் கையெழுத்து வாங்கினார் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பெட்ரோல் பங்க் நல்ல லாபத்தில் இயங்கியது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி என் மாமியாரையும், என் கணவரையும் ஏமாற்றி வழக்குச்சொத்துக்களை எழுதி வாங்கிவிட்டார் என நான் காவல்நிலையத்திலும், குற்றவியல் ..........

நீதிமன்றத்திலும் புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்குச்சொத்து 661 ½ சதுர அடி கொண்ட வீடு. வழக்குச்சொத்துக்கு செல்வதற்கு மெயின்ரோட்டிலிருந்து 6 அடி அகலம் உள்ள சந்து வழியாக செல்ல வேண்டும். அந்த சந்து 250 அடி நீளம் உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அந்த சந்தில் மூன்று இடங்களில் மொடக்கு உள்ளது என்றால் இரண்டு இடங்களில் உள்ளது. அந்த பகுதியில் சிறு சிறு வீடுகள் உள்ளனவா என்றால் கட்டிடங்கள் நிறைய உள்ளன. 1ம் பிரதிவாதிக்கு வழக்குச்சொத்தில் ஆயுட்கால உரிமை உள்ளதை தெரிந்து அதுகுறித்து 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கேட்டார் என்றும், அதற்கு 1ம் பிரதிவாதி, தனது மகன் மற்றும் பேரக்குழந்தைகளின் நலனுக்காக வழக்குச்சொத்தை விற்பனை செய்வதற்கு சம்மதித்ததின் பேரில், 3ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரயம் தகுந்த மறுபயனுடையது என்றால் சரியல்ல.

வழக்குச்சொத்திற்கு நான் எனது கணக்கிலிருந்து மின்இணைப்பு கட்டண தொகை செலுத்தி வருகிறேன். வழக்குச்சொத்தின் வீட்டுவரி, குடிநீர் கட்டண வரி, மின்இணைப்பு வரி ஆகியவை 3ம் பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்த விவரம், கிரயம் முடிந்து 2 வருடம் கழித்து எனக்கு தெரியவந்தது. அதை மறைப்பதற்காக பழைய மின்இணைப்பு அட்டைகளையும், ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி, என்னையும், 1, 2 பிரதிவாதிகளையும் வழக்குச்சொத்தில் வாடகைதாரர்களாக இருக்க அனுமதித்தார் என்றும், 2018 வரை நாங்கள் வாடகை செலுத்தி வந்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. 2018க்கு பிறகு, 2ம் பிரதிவாதி பொய்யான காரணங்கள் கூறி

வாடகை செலுத்துவதை தாமதப்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது, நானும், என் கணவரும் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி ஆட்களை கூப்பிட்டு வந்து, மிரட்டி கையெழுத்து வாங்கினார். அந்த ஆவணத்தை என் கணவர் எழுதினார். பத்து ஆட்களை கூட்டி வந்து, 3ம் பிரதிவாதி மிரட்டி எழுதி வாங்கினார். நான் சொல்வதுபோல், 3ம் பிரதிவாதி 10 ஆட்களை கூட்டி வந்து, மிரட்டி எழுதி வாங்கினார் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. மிரட்டி கையெழுத்து வாங்கியது சம்மந்தமாக நான் கரூர் நகர காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. 3ம் பிரதிவாதி மிரட்டி கையெழுத்து வாங்கவில்லை என்றும், அதனால்தான் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள என்னுடைய கையெழுத்துக்கள் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2. என் கணவரின் கையெழுத்து எனக்கு தெரியும். அந்த ஆவணத்தில் உள்ள மற்றொரு கையெழுத்து என் கணவருடையது. என் கணவரின் கையெழுத்துக்கள் பி.வா.சா.ஆ.3 மற்றும் 4.

31.01.2020 அன்று 2020 ஏப்ரல் மாதத்திற்குள் வாடகையை செலுத்த ஒப்புக்கொண்டோம், வாடகை பாக்கியை செலுத்த தவறும்பட்சத்தில் வீட்டை காலி செய்துவிடுவோம் என ஒப்புக்கொண்டு, 3ம் பிரதிவாதி பெயருக்கு நாங்கள் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதன்பிறகு, கொரோனா காலம் என்றால் 3ம் பிரதிவாதி வாடகை குறித்து எங்களிடம் ஆறுமாத காலமாக கேட்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் நாங்கள் வாடகைதாரராக இருந்து வாடகையை செலுத்தாததால், வீட்டை காலி செய்ய 3ம் பிரதிவாதி கேட்டார் என்றும், நான் 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து, கிரய ..........

ஆவணத்தின் பதிவு நகலை பெற்ற பிறகுதான் கிரய விவரம் தெரியும் என்று, பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என் கணவருக்கு கரூர் வட்டம், திருமாநிலையூர் கிராமம் சர்வே எண். 811 ல் விவசாய நிலம் இருந்தது என்றால் சரிதான். அந்த விவசாய நிலத்தை 18.11.2020 அன்று கவிராஜ் என்பவருக்கு என் கணவர் விற்பனை செய்தார். அந்த விற்பனை சம்மந்தமாக, என் கணவருக்கு எதிராக நொடிப்பு மனு எண். 18/2021 தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதன்பின்னர் அந்த மனு சமரசமாகிவிட்டது என்றும் சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன சொத்தை விற்பனை செய்தது குறித்து நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3 ம் பிரதிவாதி வெற்றுத்தாள்களில் கையெழுத்து பெற்று, மறுபயன் இல்லாமல் கிரயம் பெற்றுக்கொண்டார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் வழக்குச்சொத்தில் உரிமை இல்லை எனவும், அதுகுறித்து 3 ம் பிரதிவாதியிடம் கேட்டதற்கு, 3 ம் பிரதிவாதி என்னிடம் கடுமையாக நடந்துகொண்டார் என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் சரியான மறுபயனுக்கு வழக்குச்சொத்தை விற்பனை செய்த காரணத்தினால்தான், 1, 2 பிரதிவாதிகள், 3 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்த இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ...........

**4** <u>ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எடுத்துரைப்பில்லை. குறுக்கு விசாரணை இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்